**SET 8**

1. 'தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த்' எனப் புகழப்படுபவர்

   (A) வாணிதாசன்

   (B) கண்ணதாசன்

   (C) பாரதிதாசன்

   (D) கம்பதாசன்

2. அறிவியல் புனைக்கதை எழுத்தாளர் சுஜாதா எழுதாத நூல் எது?

   (A) என் இனிய இயந்திரா

   (B) எந்திர மனிதன்

   (C) மீண்டும் ஜீனோ

   (D) தூண்டில் கதைகள்

3. 'பரமார்த்த குரு கதைகள்' என்னும் நூலை எழுதியவரின் இயற்பெயர்

   (A) துரை மாணிக்கம்

   (B) சூரிய நாராயண சாஸ்திரி

   (C) கான்சுடான்சு சோசப் பெசுகி

   (D) ஜி.யூ. போப்

4. 'தமிழ் மொழியின் உபநிடதம்' எனப் போற்றப்படும் நூல்

   (A) தாயுமானவர் பாடல்கள்

   (B) பராபரக்கண்ணி

   (C) திருமந்திரம்

   (D) திருவாசகம்

5. கீழ்க்கண்ட நூல்களுள் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் எழுதாத நூல் எது?

   (A) மலைக்கள்ளன்

   (B) சங்கொலி

   (C) தேன்மழை

   (D) என்கதை

6. யார் இவர்?

* இவர் ஓர் ஓவியர்.

* கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர்.

* இயங்குரு படங்கள் தயாரித்தவர்.

(A) எட்வர்டு மை பிரிட்சு

(B) வால்ட் டிஸ்னி

(C) தாமஸ் ஆல்வா எடிசன்

(D) ஈஸ்டுமன்

7. உடலை வளப்படுத்தி உள்ளத்தைச் சீராக்கும் கலை

(A) யோகம்

(B) மந்திரம்

(C) தந்திரம்

(D) நடனம்

8. சேரநாட்டுத் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும், எகிப்து நாட்டின் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையே வணிக ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஆண்டு

(A) கி.பி. 1ஆம் நூற்றாண்டு

(B) கி.மு. 2 ஆம் நூற்றாண்டு

(C) கி.பி. 3 ஆம் நூற்றாண்டு

(D) கி.பி. 2 ஆம் நூற்றாண்டு

9. "காற்றே ! வா
உன்னைப் பாடாமல்
இருக்க முடியாது
ஏனெனில்
பாட்டின் மூல ஊற்றே
நீதான்" – என்ற கவிதையின் ஆசிரியர்

(A) ந. பிச்சமூர்த்தி

(B) ஆ. பாரதியார்

(C) அப்துல் ரகுமான்

(D) கல்யாண்ஜி

10. ‘கண்ணி’ என்னும் செய்யுள் வகை

(A) இரண்டிரண்டு அடிகள் கொண்ட மோனையால் தொடுக்கப்படுவது

(B) இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படுவது

(C) இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகை மோனையால் தொடுக்கப்படுவது

(D) இரண்டிரண்டு அடிகள் கொண்ட இயைபு அமையத் தொடுக்கப்படுவது

11. ‘பூவனங்கள்’ என்று ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுவது

(A) சங்க இலக்கியங்கள்

(B) சிற்றிலக்கியங்கள்

(C) காப்பியங்கள்

(D) பக்தி இலக்கியங்கள்

12. கீழ்க்கண்ட நூல்களுள் பாரதிதாசன் இயற்றாத நூல் எது?

(A) சேரமான் காதலி

(B) இருண்ட வீடு

(C) தமிழியக்கம்

(D) பிசிராந்தையார்

13. கீழ்க்காணும் நூல்களுள் 17ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இயற்றப்பட்ட நூல்

(A) தேம்பாவணி

(B) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

(C) பெருமாள் திருமொழி

(D) திருவிளையாடற் புராணம்

14. ‘சென்றே புகும்கதி இல்லை நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நனைந்து
உய்ம்மினே’ – இப்பாடல் அடிகள் குறிப்பிடும் நூல்

(A) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

(B) திருவாசகம்

(C) திருவாய்மொழி

(D) திருமந்திரம்

15. ‘காழூன்றுக் கொடி’ என்பதன் பொருள்

(A) முல்லைக் கொடி

(B) கொம்புகளில் கட்டும் கொடி

(C) படரும் கொடி

(D) பச்சைக் கொடி

16. ‘சாமரை’ என்பது

(A) மயிலிறகால் செய்யப்பட்ட விசிறி

(B) கவரிமான் முடியால் செய்யப்பட்ட விசிறி

(C) அன்னத்தின் தூவியால் செய்யப்பட்ட விசிறி

(D) பட்டுத்துணியால் செய்யப்பட்ட விசிறி

17. ‘பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்க’ இப்பாடல் அடிகள் இடம் பெற்ற நூல்

(A) நீலகேசி

(B) மணிமேகலை

(C) சீவகசிந்தாமணி

(D) குண்டலகேசி

18. ‘தருமவுரைச் சருக்கம்’ இடம் பெற்றுள்ள நூல்

(A) நீலகேசி

(B) குண்டலகேசி

(C) யசோதர காவியம்

(D) வளையாபதி

19. பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களின் ஆசிரியர்

(A) நப்பூதனார்

(B) கடியலூர் உருத்திரங்கண்ணனார்

(C) கீரந்தையார்

(D) நச்செள்ளையார்

20. கீழ்க்காண்பவனவற்றுள் பொருந்தாதது எது?

(A) சீதக்காதி

(B) சடையப்பவள்ளல்

(C) சந்திரன் சுவர்க்கி

(D) கபிலர்

21. ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே – நீ ஏன்படித்தோம் என்பதையும் மறந்து விடாதே – இத்தொடரில் பயின்று வரும் அடிமோனைச் சொற்களைத் தேர்க.

(A) ஏட்டில், விடாதே

(B) படித்ததோடு, மறந்து

(C) ஏட்டில், ஏன்படித்தோம்

(D) என்பதையும், மறந்து

22. 'தன்மை' – சொல்லுக்கான எதிர்ச்சொல் தெரிக.

(A) மென்மை

(B) திண்மை

(C) வெம்மை

(D) செம்மை

23. உடலின் உறுதி உடையவரே

உலகில் இன்பம் உடையவராம்;

இடமும் பொருளும் நோயாளிக்கு

இனிய வாழ்வு தந்திடுமோ?

– இப்பாடலில் இடம்பெற்றுள்ள சீர்மோனைச் சொற்களைத் தேர்க.

(A) உடலின், உறுதி

(B) உலகில், இன்பம்

(C) இடமும், பொருளும்

(D) இனிய, வாழ்வு

24. ‘நீரற வறியாக் கரகத்து’ என்ற பாடல் அடிகள் இடம்பெறும் இலக்கியம்

(A) அகநானூறு

(B) புறநானூறு

(C) குறுந்தொகை

(D) பரிபாடல்

25. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம், முத்தமிழ்க்காப்பியம் என்றும் சிறப்பிக்கப்படுகிறது.

இந்த விடைக்குப் பொருந்தாத வினாவைத் தேர்க.

(A) ஐம்பெருங்காப்பியங்கள் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றன?

(B) ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் எவ்வாறெல்லாம் சிறப்பிக்கப்படுகிறது?

(C) முத்தமிழ்க்காப்பியம் என்று சிறப்பிக்கப்படும் காப்பியம் எது?

(D) இத்தொடரில், ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகச் சிறப்பிக்கப்படும் நூல் எது?

26. யா, கூ – என்ற ஓரெழுத்து ஒருமொழிச் சொற்களுக்கான சரியான பொருள்கள்

(A) உடல், காடு

(B) மதில், மதகு

(C) மெய், உயர்வு

(D) அகலம், பூமி

27. சரியான விடைக்குறிப்பைத் தேர்க.

கூற்று 1 : இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்

வினா : வழாநிலை என்றால் என்ன?

கூற்று 2 : இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்.

வினா : வழுநிலை என்றால் என்ன?

(A) 1 மற்றும் 2 சரி

(B) 1 சரி 2 தவறு

(C) 1 தவறு 2 சரி

(D) 1 மற்றும் 2 தவறு

28. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து

அதனை அவன்கண் விடல் – இக்குறட்பாவில் இடம்பெற்றுள்ள சீர் எதுகைச் சொற்களாவன.

(A) இதனை, இதனால்

(B) இதனை, விடல்

(C) அவன்கண், ஆய்ந்து

(D) இதனால், இவன்முடிக்கும்

29. மதுரை பதிற்றுப்பத்தந்தாதியை எழுதியவர்

(A) அதிவீரராம பாண்டியன்

(B) கல்லாடனார்

(C) கபிலர்

(D) பரஞ்சோதிமுனிவர்

30. ‘வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்’ – இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல்

(A) மணிமேகலை

(B) ஔவை குறள்

(C) சிலப்பதிகாரம்

(D) புறநானூறு

31. இந்தியாவில் வழங்கப்படும் உயரிய விருதுகளுக்கு இணையான தமிழ்ச் சொல்லைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | பத்மஸ்ரீ | 1. | தாமரையணி |
| (b) | பாரத ரத்னா | 2. | தாமரைத்திரு |
| (c) | பத்ம விபூசன் | 3. | தாமரைச் செவ்வணி |
| (d) | பத்ம பூசன் | 4. | இந்திய மாமணி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

32. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | மணப்பாறை | 1. | மீன் சந்தை |
| (b) | அய்யலூர் | 2. | கருவாட்டுச் சந்தை |
| (c) | காராமணி குப்பம் | 3. | ஆட்டுச் சந்தை |
| (d) | நாகப்பட்டினம் | 4. | மாட்டுச் சந்தை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

33. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | தொலைநகல் இயந்திரம் | 1. | டிம் பெர்னெர்ஸ்லீ |
| (b) | ஒளிப்படி இயந்திரம் | 2. | ஹாங்க் மாக்னஸ்கி |
| (c) | தானியங்கிப் பண இயந்திரம் | 3. | செஸ்டர் கார்ல்சன் |
| (d) | வையக விரிவு வலை | 4. | ஜான் ஷெப்பர்டு பாரன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

34. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சிந்து சமவெளி | 1. | கலையழகு மண்கலன்கள் |
| (b) | ஆதிச்சநல்லூர் | 2. | பானை ஓடுகள் |
| (c) | கீழடி | 3. | முதுமக்கள் தாழி |
| (d) | செம்பியன் காண்டியூர் | 4. | சுடுமண் பொருட்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

35. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | ஒந்து | 1. | துளு |
| (b) | மூணு | 2. | கன்னடம் |
| (c) | ஐனு | 3. | மலையாளம் |
| (d) | நூரு | 4. | தெலுங்கு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

36. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கண்ணதாசன் | 1. | அரங்கசாமி |
| (b) | பெருஞ்சித்திரனார் | 2. | இராதாகிருஷ்ணன் |
| (c) | தாராபாரதி | 3. | முத்தையா |
| (d) | வாணிதாசன் | 4. | மாணிக்கம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

37. சொற்களைப் பொருளோடு பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சிறை | 1. | காடு |
| (b) | பொலம் | 2. | அழகு |
| (c) | கடறு | 3. | தேன் |
| (d) | முருகு | 4. | இறகு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

38. பொருத்துக :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (a) | சமயக்கணக்கரும் அமயக் கணக்கரும் | | | 1. | மோனைச் சொற்கள் |
| (b) | தோரண வீதியும் தோம்அறுகோட்டியும் | | | 2. | மோனை, எதுகைச் சொற்கள் |
| (c) | நடுமின், நாற்றுமின் | | | 3. | எதுகைச் சொற்கள், இயைபுச் சொற்கள் |
| (d) | ஆற்றுவார், ஆற்றல் | | | 4. | இயைபு நயம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

39. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பெய்து பழகிய மேகம் | 1. | தேனரசன் |
| (b) | கப்பலுக்குப் போன மச்சான் | 2. | நாகூர் ரூமி |
| (c) | மகளுக்குச் சொன்ன கதை | 3. | ஜெயகாந்தன் |
| (d) | சினிமாவுக்குப் போன சித்தாளு | 4. | சே. பிருந்தா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

40. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | மோப்பக்குழையும் | 1. | பயனில சொல்லாமை |
| (b) | உள்ளத்தால் உள்ளலும் தீதே | 2. | ஊக்கமுடைமை |
| (c) | ஆக்கம் அதற்வினாய்ச் செல்லும் | 3. | கள்ளாமை |
| (d) | அரும்பயன் ஆயும் | 4. | விருந்தோம்பல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

41. சொல்லும், பொருளும் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | மருப்பு | 1. | கரு |
| (b) | செறி | 2. | கொம்பு |
| (c) | அடிசில் | 3. | சிறந்த |
| (d) | சூல் | 4. | சோறு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

42. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | புரிசை | 1. | முரசு |
| (b) | பணை | 2. | அங்காடி |
| (c) | கயம் | 3. | மதில் |
| (d) | நியமம் | 4. | நீர்நிலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

43. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | எய்துவர் | 1. | பெயரெச்சம் |
| (b) | கேட்டனம் | 2. | ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் |
| (c) | பாடிய | 3. | படர்க்கை பலர்பால் வினைமுற்று |
| (d) | தேரா மன்னா | 4. | தன்மை பன்மை வினைமுற்று |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

44. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | இனிமை | 1. | முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் |
| (b) | பனைமரம் | 2. | இடப்பெயர் |
| (c) | குளக்கரை | 3. | பண்புப்பெயர் |
| (d) | கேடு | 4. | இடுகுறி சிறப்புப் பெயர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

45. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பானை | 1. | முடைதல் |
| (b) | கூடை | 2. | எய்துதல் |
| (c) | அம்பு | 3. | வனைதல் |
| (d) | கூரை | 4. | வேய்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

46. இடத்திற்கேற்றபடி எதிர்மறைச் சொற்களைத் தகுந்த எதிர்மறை வினைமுற்றுடன் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | தன்மைப் பன்மை | 1. | அன்று |
| (b) | முன்னிலை ஒருமை | 2. | அல்லோம் |
| (c) | படர்க்கை ஒன்றன்பால் | 3. | அல்ல |
| (d) | படர்க்கை பலவின்பால் | 4. | அல்லை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

47. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சோறு | 1. | பருகு |
| (b) | பால் | 2. | தின் |
| (c) | முறுக்கு | 3. | உண் |
| (d) | தண்ணீர் | 4. | குடி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

48. புகழ் பெயரொடு இயற்பெயரைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பகுத்தறிவுக் கவிராயர் | 1. | இராசகோபாலன் |
| (b) | காந்தியக் கவிஞர் | 2. | உடுமலை நாராயண கவி |
| (c) | உவமைக் கவிஞர் | 3. | பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார் |
| (d) | மக்கள் கவிஞர் | 4. | வெ. இராமலிங்கனார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

49. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | மொழி ஞாயிறு | 1. | ம.பொ. சிவஞானம் |
| (b) | சந்தக் கவிமணி | 2. | செய்கு தம்பி பாவலர் |
| (c) | சதாவதானி | 3. | தேவநேயப் பாவாணர் |
| (d) | சிலம்புச் செல்வர் | 4. | தமிழழகனார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

50. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கோளி | 1. | ஆற்றுப் பூவரசு |
| (b) | காஞ்சி | 2. | தென்னை |
| (c) | நாளிகேரம் | 3. | ஆச்சாமரம் |
| (d) | சாலம் | 4. | அரசமரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |